**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 105/2021**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | ராஜேந்திரன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 03.01.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. ஏற்கனவே இந்த வழக்கில் சாட்சியம் அளித்த புருஷோத்தமன் 2வது வாதி என்றால் சரிதான். அவரை குறுக்கு விசாரணை செய்தபோது நான் ஆஜராகியிருந்தேன் என்றால் சரிதான். அவர் என்ன பதில் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி கோவிந்தராஜ் எனது சித்தப்பா மகன். தாவா சொத்துக்கள் எனது மூதாதையர் சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் என்னென்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் மூல பத்திரம், நாங்கள் பாகம் பிரித்த பத்திரம், எனது சித்தப்பா 10 செண்ட் கொடுத்ததற்கான பத்திரம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். எத்தனை பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன் என தெரியுமா என்றால் தெரியாது.

3. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் எந்த பத்திரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த ஆவணத்தின் மூலம் சொத்து பாத்தியப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நாங்களும் எனது சித்தப்பா கிருஷ்ணனும் 10 செண்ட் நிலத்தை 1999ஆம் ஆண்டு பரிவர்த்தனை செய்தோமா என்றால் சரிதான், எனது சித்தப்பா தான் 10 செண்ட் கிரயம் கொடுத்தார் நாங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

4. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 ஆவணத்தின் படி 10 செண்ட் நிலத்தை நாங்கள் கிருஷ்ணனுக்கு கொடுத்து அவரிடம் இருந்து 10 செண்ட் நிலத்தை நாங்கள் வாங்கிக்கொண்டோம் என்றால் இந்த விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.156/1டி சொத்தில் 10 செண்ட் நிலங்களை நாங்கள் பரிவர்த்தனை செய்தோம் என்றால் சரியல்ல.

5. எனது சகோதரரை குறுக்கு விசாரணை செய்த அன்று பி.சா.ஆ.2 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.2 ஆவணத்தை வா.சா.1 ஏற்றுக்கொண்டதால் அந்த ஆவணத்தை மறுக்க வேண்டி நான் சாட்சியாக வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த சர்வே எண்களுக்காக வழக்கு போட்டுள்ளோம் என்றால் 156, 155. அதன் உட்பிரிவு மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் உட்பிரிவு தெரியாது சர்வே எண்.155 1 ஏக்கரா 62 செண்ட், சர்வே எண்.156 3 ஏக்கரா 84 செண்ட்.

6. நாங்கள் எவ்வளவு சொத்திற்கு பாகப்பிரிவினை செய்தோம் என்றால் 1 ஏக்கரா 28 செண்ட்டிற்கு நாங்கள் அண்ணன், தம்பிகள் பாகப்பிரிவினை செய்துகொண்டோம். எந்த வருடம் பாகப்பிரிவினை செய்தோம் என்றால் பார்த்தால் தான் தெரியும். எந்த நிலத்தில் பிரச்சினை செய்வதாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் 155 மற்றும் 156. சர்வே எண்.155–ல் 2 செண்ட் நிலத்திற்கும், சர்வே எண்.156–ல் 10 செண்ட் நிலத்திற்கும் பிரச்சினை செய்கிறார்.

7. பிரமாண வாக்குமூலத்தில் எந்த நிலத்திற்கு பிரச்சினை செய்கிறார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். என்னை கேட்டு தான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்தார் என்றால் சரிதான். தாவாவில் எந்த அட்டவணை சொத்தில் பிரச்சினை செய்வதாக சொல்கிறேன் என்றால் அதுபற்றி தெரியவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் ஏ, பி, சி, ஈ, ஜி அட்டவணை என சொல்லியுள்ளது என்னவென்று தெரியாது என்றால் சரிதான். மேற்படி அட்டவணை சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என தெரியாது என்றால் சரிதான்.

8. 10 செண்ட் பிரச்சினைக்குரிய நிலம் எந்த உட்பிரிவிற்கு சொந்தமானது என தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் எந்த சர்வே எண்ணில் பிரதிவாதி பிரச்சினை செய்வதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.1 அளித்த சாட்சியத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உண்மைக்கு புறம்பான பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.